**செய்தி வெளியீடு எண்: 806** **நாள்: 18.11.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

# <u>இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021</u>

# <u>முதன்மை பயிற்சியாளருக்களுக்கான முதல் கட்ட பயிற்சி வகுப்பு</u>

(வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR) அந்நாள்வரை சரிசெய்தல்- 2020)

**தமிழ் நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரகத்தால் நடத்தப்படுகிறது.**

**இடம் : அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம், சென்னை**

**பயிற்சி தேதி : 18.11.2019 முதல் 23.11.2019 வரை மற்றும் 02.12.2019 முதல் 07.12.2019 வரை.**

மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021 ஆனது இந்திய சுதந்திரத்திற்கு பிறகு நடைபெறவிருக்கும் 8-வது மற்றும் 1872-ம் ஆண்டிலிருந்து விடுபடாமல் தொடர்ந்து நடைபெறும் 16-வது கணக்கெடுப்பாகும். இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1872 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. ஒரே நேரத்தில் நாடு முழுவதற்குமான ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு, 1881-ம் ஆண்டு நடத்தப்பட்டது. அதிலிருந்து தொடங்கி பத்து வருடங்களுக்கு ஒருமுறை, பல்வேறு இயற்கை பேரிடர்களுக்கிடையிலும் மக்கள் தொகை கணக்கெடுப்பு விடுபடாமல் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

இந்திய சுதந்திரத்திற்கு பின்னர் மக்கள் தொகை கணக்கெடுப்பானது, அரசியலமைப்பு சட்ட விதிகள், சென்சஸ் சட்டம், 1948-ன் கீழ் அரசாணை பிறப்பிக்கப்பட்டு பத்து வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. **இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021** மற்றும் தேசிய மக்கள் தொகை பதிவேடு அந்நாள் வரை சரிசெய்தல் பணி இரண்டு கட்டங்களாக நடத்தப்படுகிறது, அதாவது (i) வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு (ii) மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பதாகும். முதற்கட்ட பணியில் அதாவது வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்பு பணியின் போது மாநிலம்/யூனியன் பிரதேசங்களின் உள்ளூர் நிலைமைகளின் அடிப்படையில், 2020 ஆம் அந்த ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரையில் உள்ள 45 நாட்களுக்குள் வீட்டின் நிலை, குடும்பங்களுக்கு கிடைக்கும் வசதிகள் போன்றவை முறையாக அடையாளம் காணப்பட்டு அட்டவணையில் பட்டியிலிடப்படும்.

நாட்டில் உள்ள வழக்கமாக வசிக்கும் அனைத்து மக்களுக்காக 2010 ஆம் வருடம் தேசிய மக்கள் தொகை பதிவேடு (NPR-2020) உருவாக்கப்பட்டது. தேசிய மக்கள் தொகை பதிவேடு, குடியுரிமைச் சட்டம் 1955, குடியுரிமை விதிகள், 2003 ஆகிய சட்டங்களின் கீழ்

மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான தரவுகள்(விவரங்கள்) 2011 மக்கள் கணக்கெடுப்பின் முதல் கட்டமான வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புடன் சேர்த்து சேகரிக்கப்பட்டது. ஒரு விரிவான தரவுத்தளம் உருவாக்க, 2015-16 ஆம் ஆண்டு மக்கள் தொகை பதிவேட்டின் தரவுதளமானது அந்நாள் வரை சரிசெய்யப்பட்டது. இப்பொழுது மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமான வீட்டுப்பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புடன், 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் தரவுத்தளத்தினை அந்நாள் வரை சரி செய்ய இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் வரலாற்றில் முதல் முறையாக களப்பணியில், தகவல் சேகரிக்க கைபேசி செயலி பயன்படுத்தப்படுகிறது. இந்த பணியினை கண்காணிப்பதற்காக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய பயிற்சியாளர்களால், முதன்மை பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. புது தில்லி இந்திய தலைமை பதிவாளர் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆணையர் அலுவலகத்தில் பயிற்சி பெற்ற தமிழ் நாடு மக்கள் தொகை இயக்குனரக தேசிய பயிற்சியாளர்கள், மற்றும் சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சியகத்தின் தேசிய பயிற்சியாளர்களாலும் முதன்மை பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையினை சார்ந்த அதிகாரிகளான இந்த முதன்மை பயிற்சியாளர்கள் களபயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பார்கள். களப்பயிற்சியாளர்கள் பின்னர் கணக்கெடுப்பாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிப்பர். முதன்மை பயிற்சியாளர்களுக்கு கொடுக்கப்படும் பயிற்சியில் நேரடி பயிற்சி திறனை மேம்படுத்தவும் மற்றும் மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் தேசிய மக்கள்தொகை பதிவேட்டிற்கான அடிப்படை கோட்பாடுகளையும் உள்ளடக்கியது.


தமிழ் நாடு மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குனரகம்,
ராஜாஜி பவன், E- பிரிவு, முன்றாவது தளம், பெசன்ட் நகர், சென்னை - 600090.
வலைப்பக்க முகவரி: www.censusindia.gov.in, www.census.tn.nic.in
மின்னஞ்சல்: dco-tam.rgi@censusindia.gov.in
தரைவழி தொலைபேசி: 044-24912993, 24918279
தொலை நகல் : 24911992



**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**